## Barclays Cycle Hire திட்டம்




# 1. Barclays Cycle Hire திட்டம் என்பது என்ன?

**இலண்டனைச் சுற்றிவரச் சிறந்ததொரு வழி சைக்கிளில் சவாரி செய்வதாகும் - இவ்வழி விரைவானது, சௌகர்யமானது, சூழலுக்கு உகந்தது அத்துடன் அருங்காட்சிகளை நெருங்கிப் பார்க்க அது வாய்ப்பளிக்கிறது! அது மாத்திரமல்ல, எங்கள் புதிய திட்டம் பணத்துக்கு மிகையான பெறுமதி கொண்டது.**

**Barclays Cycle Hire திட்டம் (பார்க்லேய்ஸ் சைக்கிள் ஹயர் திட்டம்) மத்திய இலண்டனில் பொதுமக்கள், சுய-சேவை மூலம் சைக்கிள்களைப் பகிர்ந்துகொண்டு குறுகிய பயணங்களை மேற்கொள்ள வகை செய்யும் ஒரு செயல்திட்டமாகும். இலண்டனை சைக்கிள் சவாரிகளுக்கு உகந்த நகரமாக்கும் திட்டத்தில் இது ஓர் அங்கமாகும்.**

நீங்கள் 6,000 சைக்கிள்களை, நகரம் முழுவதிலுமுள்ள சுமார் 400 சைக்கிள் நிறுத்து நிலையங்களில் இருந்து ஆண்டு முழுவதும், 24 மணி நேரமும் வாடகைக்கு எடுக்கலாம். நீங்கள் சேருமிடத்தை அடைந்ததும், ஆகக்கிட்டிய துாரத்தில் உள்ள நிறுத்துமிடத்தில் அதனை மீள-நிறுத்தி ஒப்படைக்கவும்.

முன்னதாக ஏற்பாடு செய்யவேண்டியதில்லை, சைக்கிள் ஒன்றை எடுத்துக்கொண்டு சவாரி செய்யுங்கள்!

சைக்கிள்களை எடுப்பதற்கு சிறிய திட்ட நுழைவுக் கட்டணம் ஒன்றையும் பாவனைக் கட்டணம் ஒன்றையும் நீங்கள் செலுத்துவீர்கள். எவ்வளவு நேரம் நீங்கள் சவாரி செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்து பாவனைக் கட்டணம் அமையும் – 30 நிமிடங்களுக்கு குறைந்த நேரப் பயணங்கள் அனைத்துக்கும் பாவனைக் கட்டணம் **கிடையாது.**

உங்கள் திட்ட நுழைவை வாங்குவதற்கு இரு வழிகள் உள்ளன:

- **உறுப்பினராக (Member)** tfl.gov.uk/barclayscyclehire இணையத்தில் கையெழுத்திட்டுச் சேர்ந்து கொள்ளவும்

அல்லது

- **சமயாசமய/அமயப் பாவனையாளராக (Occasional/Casual User)** Barclays Cycle Hire திட்ட சைக்கிள் முனையம் ஏதாவதொன்றில் அல்லது பின்வரும் உடன் நிகழ் இணையத்தில் நுழைவை வாங்கவும்: tfl.gov.uk/barclayscyclehire

# 2. அது எவ்வாறு செயல்படுகிறது?

### உறுப்பினர்கள்

- வெளிச்சம் வீசாத சைக்கிள் நிறுத்தல்/அகற்றல் முனை ஒன்றை அணுகவும்
- உங்கள் உறுப்புரிமைத் திறப்பை சைக்கிள் நிறுத்தல் /அகற்றல் முனை திறப்புத் துவாரத்தினுள் செலுத்தவும்
- உங்கள் கணக்கு சரிபார்க்கப்படும்வரை பழுப்பு-மஞ்சள் வெளிச்சம் வீசிக்கொண்டிருக்கும்
- பச்சை வெளிச்சம் வீசுகிறது: உங்கள் சைக்கிளை முனையிலிருந்து அகற்றிப் பயணமாகவும்
- உங்கள் பயண முடிவில் எந்த சைக்கிள் நிறுத்து நிலையத்திலாவது மீள-நிறுத்தி ஒப்படைத்துவிட்டு முனையில் வெளிச்சம் பச்சை நிறமாக மாறுவதை உறுதிப்படுத்தவும்



### சமயாசமய/அமயப் பாவனையாளர்கள்

- உங்கள் திட்ட நுழைவுக் கட்டணத்தை உடன் நிகழ் இணையத்தில் அல்லது சைக்கிள் நிறுத்து நிலைய முனையத்தில் வாங்கவும்
- நீங்கள் விரும்பும் சைக்கிள் நிறுத்து நிலையத்துக்குச் சென்று முனையத் திரையில் தெரியும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்
- உங்களுக்கு சைக்கிளை அகற்ற வகை செய்யும் 5 இலக்கக் குறியீடு ஒன்று வழங்கப்படும்
- இக்குறியீட்டை சைக்கிள் நிறுத்தல்/அகற்றல் முனையிலிருந்து அகற்றும் பொருட்டு, வெளிச்சம் வீசாத நிலையில் உள்ள மானிப்பட்டையில் இடவும்
- குறியீடு சரிபார்க்கப்படும்போது பழுப்பு-மஞ்சள் வெளிச்சம் வீசும்



- பச்சை வெளிச்சம் வீசுகிறது: உங்கள் சைக்கிளை அகற்றிப் பயணமாகவும்
- உங்கள் பயண முடிவில் சைக்கிளை மீள-நிறுத்தி ஒப்படைத்துவிட்டு, வெளிச்சம் பச்சை நிறமாக மாறுவதை உறுதிப்படுத்தவும்

உங்களுக்கு ஆகக்கிட்டிய தூரத்திலுள்ள சைக்கிள் நிறுத்து நிலையத்தில் இடமிருக்காவிடில் முனையம் அணித்தாக உள்ள மற்றொரு நிலையத்துக்கு வழிகாட்டும்.

நீங்கள் விரும்பினால் பற்றுச்சீட்டு அல்லது பயணப் பதிவு ஒன்றைக் கோர இயலும்.

### பழுதுபார்த்தல்

செயல்திட்ட எல்லைக்குள் நாங்கள் சைக்கிள்களை ஒழுங்காகச் சோதித்து மறுவிநியோகம் செய்வோம். அத்துடன் நாங்கள் பழுதுபார்க்க வேண்டிய சைக்கிள்களுக்குப் பதிலீடு செய்வோம். உங்கள் சைக்கிள் பழுதுற்றால், அதனை ஆகக்கிட்டிய தூரத்தில் உள்ள நிறுத்தல்/அகற்றல்முனையிடம் சேர்த்துவிட்டு, பழுது பித்தானை அழுத்தவும்.



# 3. எவ்வளவு செலவாகும்?

**சைக்கிள் ஒன்றை வாடகைக்கு எடுப்பதற்கு நீங்கள் செலுத்தவேண்டியவை**

## திட்ட நுழைவுக் கட்டணம்

| கீழ்க்கண்டவாறு திட்டத்தைப் பயன்படுத்த உங்களை அனுமதிக்கிறது | |
|---|---|
| 24 மணித்தியாலங்களுக்கு | £1 |
| 7 நாட்களுக்கு | £5 |
| 1 ஆண்டுக்கு (திட்ட உறுப்பினர்கள் மட்டும்) | £45 |

நீங்கள் தெரிவு செய்த நுழைவுக் காலத்தினுள் நீங்கள் விரும்பும் எத்தனை பயணங்களையும் மேற்கொள்ளலாம்.

| இதர கட்டணங்கள் | |
|---|---|
| சைக்கிளை தாமதமாக மீள ஒப்படைப்பதற்கான கட்டணம் | £150 |
| சைக்கிள் சேதத்துக்கான கட்டணம் | £300 வரை |
| சைக்கிளை மீள ஒப்படைக்காமைக்கான கட்டணம் | £300 |

+

## பாவனைக் கட்டணம்

| நிமிடங்கள் 30 வரை | கட்டணமில்லை |
|---|---|
| அதன்மேல் | |
| 1 மணித்தியாலம் வரை | £1 |
| 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் வரை | £4 |
| 2 மணித்தியாலங்கள் வரை | £6 |
| 2 மணித்தியாலங்கள்30 நிமிடங்கள் வரை | £10 |
| 3 மணித்தியாலங்கள் வரை | £15 |
| 6 மணித்தியாலங்கள் வரை | £35 |
| 24 மணி. வரை (ஆகக்கூடிய பாவனைக் கட்டணம்) | £50 |

பயணம் ஒவ்வொன்றினதும் முதல்30 நிமிடங்கள் கட்டணமற்றவை. அதன்மேல் நீங்கள் சைக்கிளை அகற்றிய நேரம் தொடக்கம், அதனைத் திருப்பி ஒப்படைத்த நேரம் வரை கணக்கிடப்படும் பாவனைக் கட்டணத்தைச் செலுத்துவீர்கள்.

வயது 14 அல்லது கூடுதலாக உள்ள எவரும் சைக்கிள்களைப் பயன்படுத்தித், திறப்பு ஒன்றை வைத்திருக்கக் கூடுமெனினும், திட்ட நுழைவை வாங்குவதற்கு உங்கள் வயது 18 அல்லது அதற்குக் கூடுதலாக இருத்தல் வேண்டும். உங்கள் நுழைவுக் காலத்தில் நீங்கள் விரும்பும் எத்தனை தடவைகளும் சைக்கிள் ஒன்றை எடுக்கலாம்.

✓ **சூசகமாக ஒரு செய்தி: ஒவ்வொரு பயணமும் 30 நிமிடங்களுக்குள் அமையும் வகையில் பல பயணங்களைச் செய்வீர்களெனில், நீங்கள் நாள் முழுவதும் £1 –க்கு சைக்கிள் சவாரி செய்ய இயலும்.**

**உறுப்பினர்களுக்கும் சமயாசமய/அமய பாவனையாளர்களுக்கும் கட்டண விதிப்புக்கள் ஒன்றே.**

### பணம் செலுத்தும் தெரிவுகள்

உறுப்பினர்கள் நுழைவை உடன் நிகழ் இணையத்திலும், அமய பாவனையாளர்கள் உடன் நிகழ் இணையத்தில் அல்லது முனையம் ஒன்றிலும் வீஸா அல்லது மாஸ்டர்கார்ட் கடன் (credit) அல்லது பற்று (debit) அட்டையைப் பயன்படுத்தி வாங்கலாம்.

பாவனைக் கட்டண விதிப்புகள் உங்கள் நுழைவுக் காலம் முடிந்ததும் அல்லது ஆகக்கூடிய £50 விதிப்பை எட்டியதும் உங்கள் கணக்கில் பற்று வைக்கப்படும்.

முனையங்கள் காசுக் கொடுப்பனவுகளை அல்லது Oyster அட்டைகளை ஏற்றுக்கொள்ளமாட்டா.

# 4. உறுப்பினராக வருவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

Barclays Cycle Hire திட்டத்தின் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்வதனால் ஏற்படும் நன்மைகள் பல:

- 24 மணி நேர, 7 நாள், அல்லது ஓராண்டு நுழைவு காலத்தைத் தெரிவு செய்வீர்கள்
- சைக்கிள்களுக்கான நுழைவை விரைவாகவும் இலகுவாகவும் பெறத் திறப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்வீர்கள். சைக்கிள் முனையத்தில் வரிசையில் நிற்கத் தேவையில்லை, சைக்கிளை அகற்றிச் சவாரி செய்க
- குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அவர்களுக்குரிய நுழைவையும் திறப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பீர்கள் (3 வரை மேலதிக பாவனையாளர்கள்)
- உங்கள் நுழைவு என்றும் காலாவதியாகாமல் இருக்கும் வகையில், தன்னியக்க நுழைவுக் கட்டணப் புதுப்பித்தலைத் தெரிவு செய்வீர்கள்
- நேரடிப் பற்று ('டிரெக்ட் டெபிட்') மற்றும் கொடுப்பனவு அட்டை தெரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்வீர்கள்
- உங்கள் கணக்கையும் செயல்பாடுகளையும் உடன் நிகழ் இணையத்தில் நிர்வகிப்பீர்கள்

### ஓராண்டு நுழைவு

£45 மட்டும் செலவழித்து ஆண்டில் வரும் ஒவ்வொரு நாளும் இத்திட்டத்தை நீங்கள் பயன்படுத்தலாம். Barclays Cycle Hire திட்டத்தை ஒழுங்காகப் பயன்படுத்தி வந்தால், அது 24 மணி நேர அல்லது 7 நாள் நுழைவிலும் பார்க்கப் பெரிய சேமிப்பாக அமையும்.

### உறுப்புரிமைத் திறப்பு

உங்கள் உறுப்புரிமைத் திறப்புக்கு ஒரே முறை £3 கட்டணம் செலுத்தவும். அது சைக்கிள் முனையத்தைப் பயன்படுத்தாமலே சைக்கிள் ஒன்றை எடுக்க உங்களை அனுமதிக்கும்.



# 5. பாதுகாப்பு, பயிற்சி மற்றும் சைக்கிள் பற்றி?

மத்திய இலண்டனில் சைக்கிள் சவாரி செய்வது உங்களுக்குப் புது அனுபவமெனில், அல்லது ஒரு மீட்டல் பயிற்சியால் பயனுண்டு என உணர்வீர்களானால், உண்மையாகவே சைக்கிளோட்டப் பயிற்சி ஒன்றைச் செய்வதால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

### பயிற்சி

இலண்டனில் சைக்கிள் சவாரியை அனுபவிப்பதற்கான தேர்ச்சியும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு ஏற்படுவதை உறுதிப்படுத்தும் சிறந்த வழி சைக்கிளோட்டப் பயிற்சியாகும். வயது வந்தவர்களுக்கு இலவசமாக அல்லது மானியத்துடன் சைக்கிளோட்டப் பயிற்சி வழங்கும் பொருட்டு, நாங்கள் அனைத்து இலண்டன் மாவட்டங்களுடனும் இணைந்து செயலாற்றி வருகிறோம்.

உங்கள் மாவட்டத்திலேயே உள்ளூர் மட்டத்தில் பயிற்சி கிடைக்கும். அதனை வழங்குபவர்கள் தேர்ச்சி பெற்ற தேசிய நியமதர (National Standards) பயிற்சியாளர்களாவர்.

நீங்கள் வசிக்கும், வேலை செய்யும் அல்லது கல்வி கற்கும் மாவட்டத்தில் கிடைக்கும் சைக்கிளோட்டப் பயிற்சி பற்றி பின்வரும் வலைத்தளத்தில் பார்த்து விபரம் அறியலாம்: tfl.gov.uk/cycletraining

செயல்திட்டத்தின் நன்மைகளை ஒவ்வொருவரும் வெகுதாராளமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக, நீங்கள் எங்கள் நடத்தைநெறித் தொகுப்பேட்டை ஒழுகி நடத்தல் வேண்டும்.

### சைக்கிள்கள்

திருட்டுப் போவதை அல்லது சேதமடைவதைத் தடுக்கக்கூடிய சிறப்புக்கள் சைக்கிள்களில் உள்ளன. தலைக்கவசங்கள் மற்றும் பூட்டுக்கள் வழங்கப்படமாட்டா. நீங்கள் வெளியே சென்று அலுவல்களில் ஈடுபடும்போது சைக்கிளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும். நீங்கள் அதில் சவாரி செய்யாவிடில், அதனை முனையிலிட்டுப் பத்திரப்படுத்தவும்.



# Barclays Cycle Hire திட்டப் பாவனையாளர் நடத்தைநெறித் தொகுப்பேடு

உங்கள் சவாரியையும் இலண்டனையும் அனுபவித்து இன்புற உதவியாக, நீங்கள்

## ✓ செய்யவேண்டியவை



1. செய்வீர் ஏனைய வாகனங்கள் மற்றும் பாதசாரிகளைக் கவனித்து, உங்கள் நோக்கங்கள் பற்றி தெளிவான கைச் சைகைகளைக் காட்டவும்
2. செய்வீர் லொறிகளைச் சுற்றிக் கவனமாக இருக்கவும். போக்குவரத்து வெளிச்சங்களுக்கு சற்று முன்னதாகவோ, அவை உள்ள இடத்திலோ லொறிகளை இடதுபுறமாக ஒருபோதும் கடந்து செல்லாதீர்
3. செய்வீர் இயலுமானபோது குறிக்கப்பட்ட சைக்கிள் பாதைகளைப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கவும்
4. செய்வீர் பிரதிபலிக்கும் அல்லது ஒளிவீசும் 'ப்ளோறொசென்ட்' உடை தரிப்பதன் மூலம் இரவில் உங்களைத் தெரியவைக்கவும்



5. செய்வீர் சைக்கிள் வீதிக்கு ஏற்றது என்று சோதிக்கவும் (டயர்கள், ப்ரேக்குகள், இருக்கை, மணி)
6. செய்வீர் திருட்டைத் தவிர்க்கும் பொருட்டு, சைக்கிள் நிறுத்தல்/அகற்றல் முனையில் சரியாக நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும்



7. செய்வீர் கைவிடப்பட்ட சைக்கிள்கள் பற்றித் தொடர்பு நிலையத்துக்கு (Contact Centre) (0845 026 3630) அழைப்பெடுப்பதன் மூலம் அறிவிக்கவும்
8. செய்வீர் சைக்கிளோட்டும் பயிற்சி பற்றி மேலும் தகவல் அறிய பின்வரும் வலைத் தளம் செல்லவும்: tfl.gov.uk/cycletraining
9. செய்வீர் எப்போதும் பெருந்தெரு விதித் தொகுப்பேட்டின்படி (The Highway Code) நடந்துகொள்ளவும் (direct.gov.uk/highwaycode)



10. செய்வீர் சைக்கிள் தலைக்கவசமணிவது பற்றிச் சிந்திக்கவும்

## ✗ செய்யலாகாதவை



11. செய்யாதீர் சிவப்புப் போக்குவரத்து வெளிச்சத்தினூடாக சவாரி செய்தல். அது அபாயகரமானது மற்றும் சட்டவிரோதமானது
12. செய்யாதீர் நடைபாதையைப் பகிர்ந்து பயன்படுத்தலாமென அறிவிப்பு இருந்தாலொழிய அதன்வழி சவாரி செய்தல்
13. செய்யாதீர் ஒரு-வழி வீதிகளில், அவை சைக்கிளோட்டிகளுக்கு இரு-வழியெனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலொழிய, அவற்றினூடாகப் பிழையான திசையில் சவாரி செய்தல்



14. செய்யாதீர் போதிய இடவசதி மற்றும் பாதுகாப்பு இருந்தாலொழிய முன்செல்லும் வாகனத்தை முந்திச் செல்லாதீர்
15. செய்யாதீர் ஓடும் வாகனங்களை நெருங்கிச் சவாரி செய்தல்
16. செய்யாதீர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கார்களை நெருங்கிச் செல்லாதீர் கார் கதவுகள் திடீரெனத் திறக்கப்படலாம்
17. செய்யாதீர் சைக்கிளோட்டும்போது கைபேசியை அல்லது காதில் வைத்துக்கேட்கும் கருவிகளைப் பயன்படுத்தாதீர்
18. செய்யாதீர் மது அல்லது போதைப்பொருள் போதையில் சைக்கிள் செலுத்தாதீர்



19. செய்யாதீர் வாடகைச் சைக்கிளை கவனிப்பாரின்றி விடல். நீங்கள் அதனைச் செலுத்தாவிடில், மீள ஒப்படைக்கவும்
20. செய்யாதீர் சைக்கிளில் பயணிகளை அல்லது கூடையில் விலங்குகள்/ பருமனான பொருட்களைக் காவிச்செல்லாதீர்



**இறுதியாக, நீங்கள் யூகேயில் ஒரு வருகையாளரெனில், இடதுபுறத்தில் சைக்கிளோட்டவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்**

## ஆரம்பித்தல்

பின்வரும் வலைத் தளத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து, உங்கள் திட்ட நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி அத்துடன் Barclays Cycle Hire திட்டம் பற்றிய ஆகப்பிந்திய தகவல்கள் அனைத்தையும் பெறவும்:
**tfl.gov.uk/barclayscyclehire**

Barclays Cycle Hire திட்டத் தொடர்பு நிலையம்: **0845 026 3630** அல்லது, ஐக்கிய இராஜ்யத்துக்கு வெளியே இருந்து அழைப்பதானால், தயவு செய்து அழைக்கவும்: **+44 (0)20 8216 6666.**

வலைத் தளம்
**tfl.gov.uk**

24 மணி நேர பயணத் தகவல்கள்
**0843 222 1234***

*BT நிலவழித் தொலைபேசியில் அழைப்பதானால் நீங்கள் நிமிடத்துக்கு 5p–க்குக் கூடுதலாகச் செலுத்தமாட்டீர்கள். இணைப்புக் கட்டணம் ஒன்று இருக்கலாம். கைபேசி அல்லது வேறு நிலவழிச் சேவை வழங்குநர்களின் கட்டணங்கள் வேறுபடலாம்.